# சிவ பக்தை செம்பியன் மாதேவி

அ. கிருத்திகா[1] & முனைவர் சி. அழகர்[2]
[1]முனைவர் பட்ட ஆய்வாளர்
[2]துறைத்தலைவர்
முதுகலை மற்றும் தமிழ்த்துறை
கொங்கு கலை அறிவியில் கல்லூரி, கரூர்.

9

**முன்னுரை**

மனிதன் பேசத் தொடங்குவதற்கு முன் தன் எண்ணங்களைச் சைகைகளாலும்இ உணர்ச்சிகளை ஓசைகளாலும் வெளிப்படுத்தினான். தன் உணர்ச்சிகளை ஓசைகளின் வழி உணர்த்தியபோது சொற்கள் பிறழ ஆரம்பித்து , பின் இச்சொற்களே பேச்சு மொழியாக உருமாறியது. காலப்போக்கில் பேச்சு மொழிக்கு
வரிவடிவத்தைக் கொடுத்து மொழி என்னும் ஊடகத்தைத் தோற்றுவித்தான். மொழியானது என்று தோன்றியதோ இலக்கியமும் அதனோடே தோன்றியது , தமிழ் இலக்கியங்கள் யாவும் மனிதனைக் குறித்த சிக்கல்களையும் அதற்கான தீர்வினையும் கதைகள் வாயிலாகவும் நாவல்கள் வாயிலாகவும் வெளிப்படுத்துகின்றன. மனிதன் மொழியைக் கொண்டு தன் மனத்தில் எழுந்த உணர்வுகளை பிறர் மனத்திலும் ஊடாடச் செய்விப்பது நாவல் இலக்கியமாகும்

**<u>நாவல் இலக்கியங்கள்</u>**

தமிழக்கிய வகைகளில் புனைகதை என்றழைக்கும் புதினமும் ஒன்று திணைசார் மக்களின் வாழ்க்கை முறை பண்பாடு மக்களின் வாழ்க்கை முறை பண்பாடு பழக்க வழக்கங்களைச் சித்திரிப்பதில் புதினங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. நாவல் இலக்கியம் அறிவுறுத்தல் , அறிவித்தல் , மகிழ்வித்தல் போன்ற பணிகளைச் செய்கிறது இலக்கிய வகைகள் ஒவ்வொன்றும் அவ்வவ்காலச் சமுதாயத்தில் வாழ்ந்த பெண்களின் நிலைபற்றி வெளிப்படுத்துகின்றன் உலகில் வாழும் ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு தனிச்சிறப்புகளைப் பெற்று தனித்துவமாக தன்னம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றன . அத்தகைய உயிரினங்களில் பெண்ணினம் என்பது தனிச் சிறப்புடையது அச்சிறப்புடைய பெண்ணினத்தில் பிறந்த செம்பியன் மாதேவியின் சிறப்பினை ஆய்வுக் கண்ணோட்டத்தின் வழி "பொன்னியின் செல்வன்" நாவலில் காணமுடிகிறது

**<u>பிறப்பும் வளர்ப்பும்</u>**

மழவரையர் வம்சமானது சோழப் பேரரசின் சிற்றரசுகள் பலவற்றின் ஒன்றாக இருந்தததது அந்த வம்சத்தின் மகளாக செம்பியன் மாதேவி பிறந்தார் "செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண் பாலான" (தொல்காப்பியம்)
பெண் என்பவள் அடக்கமுடையவளாக அமைதியான குணம் உடையவளாக நேர்மை உள்ளவளாக உண்மையினை வற்புறுத்தும் சொல்வன்மை கொண்டவளாக நல்ல அறிவு உடையவளாக இருக்க வேண்டுமென்று தொல்காப்பியம் கூறுகின்ற அளவிற்கு செம்பியன் மாதேவியார் சிறு வயதிலே இருந்து சிவபெருமான் மிது பற்றுடன் இருந்தார் பார்வதிதேவி போன்று சிவனையே கணவனாக அடைய கோவிலில் தவம் செய்து சிவ சிந்தனை மிகுந்து வளர்ந்தார்

**<u>சிவபக்தரான கண்டாதித்தேவரின் வருகை</u>**

"பொன்னியின் செல்வன்" புதினத்தில் வருகின்ற சோழமன்னன் கண்டராதித்தர் சிவகைங்கரியத்தில் ஈடுபாடு கொண்டவர். மன்னனாக இருந்தாலும் அரசாங்க காரியங்கனில் ஈடுபாடு இன்றி சிவபக்தியில் திளைத்தவர். சிவபக்திமான் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டவர். ஒருநாள் மழவரையருடன் சிவலாயம் செல்கிறார் .அங்கு சிவாலயத்தில் தவத்தில் மூழ்கியிருக்கும் செம்பியின்மாதேவியைப் பார்க்கின்றார்

தவம் கலைந்து எழுந்திருக்கும் செம்பியன் மாதேவி சிவன்தான் தன் கண்முன்னே வந்தளுளியிருக்கின்றார் என நினைத்து கண்களிரண்டும் நீர் கோர்க்க வணங்குகிறார். பின் தன் முன்னால் அரசன் தான் நிற்கின்றார் என்பதை உணர்ந்து ஒடிவிடுகிறார் தன்னைப்போலவே சிவபக்தையான செம்பியன் மாதேவியை கண்டராதித்தர் மணந்து கொள்கின்றார்

**கண்டராதித்த சோழரின் விருப்பமும் விளைந்ததும்**

கண்டராதித்த தேவர் சிம்மாசனம் ஏறிய பொழுது சோழ சம்ராஜ்யத்தில் சங்கடமான நிலை ஏற்பட்டது பராந்தகச் சக்கரவர்த்தியின் ஆட்சிக் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் தெற்கே ஈழநாடு வரையிலும் வடக்கே கிருஷ்ணா நதி வரையிலும். பரவியது ஆனால் அவருடைய ஆட்சிக் காலத்தில் இராஜ்யத்துக்கும் இராஜகுலத்துக்கும் பல விபத்துக்கள் ஏற்பட்டன. இராவணேசுவரனுடைய மூல பல சைன்யத்தைப் போல் இரட்டை மண்டலத்துப் படைகள் படை எடுத்து வந்தன. அப்போரில் அவரை எதிர்த்த இராஜாதித்த தேவர் பலியாகிவிட்டார்.

இதனால் கண்டராதித்த சோழர் இளம் பிராயத்திலேயே இராஜ்ய விவகாரங்களை வெறுத்துச் சிவபெருமானிடம் மனத்தைச் செலுத்தி வந்தார். மன்னர்களில் மண்ணாசை காரணமாக மக்கள் போரிட்டு மடிவதை வெறுத்தார். சிவஞானச் செல்வர்களான பெரியவர்களின் சகவாசத்திலும். புண்ணியஸ்தல யாத்திரையிலும் ஆலய வழிபாட்டிலும் காலத்தைச் செலவிட்டார் வாள் , வேல் , முதலிய ஆயுதங்களைக் கையினால் தொடவும் அவர் விரும்பவில்லை. யுத்த தந்திரங்களிலும் போர் முறைகளிலும் அவர் பயிற்சி பெறவில்லை. பொய்யும் புனைசுருட்டும் வஞ்சகமும் வேஷமும் நிறைந்து கொலை முதலிய பாவங்களும் நிறைந்தது இராஜரீகம் என்று நம்பினார். ஒரு திருடன் பிறர் பொருளைத் திருடுவதற்கும் ஒரு நாட்டு அரசன் இன்னொரு நாட்டைக் கவர்வதற்கும் என்ன வித்தியாசம் ?" என கண்டராதித்தர் கேட்டார்.

விதியின் பயனால் கண்டராதித்தர் சோழ நோடடின் பாரத்தைச் சும்க்கும படியாக நேர்ந்தது. பராந்தகச் சக்ரவர்த்தி இராஜ்யத்துக்கு நேர்ந்த பல விபத்துகளினாலும் இராஜாதித்தரின் மரணத்திலும் மனம் நொந்து மரணத்தை எதிர்பார்த்திருக்கும் வேளையில் கண்டராதித்தரை அழைத்து இராஜ்ய பாரத்தை நீதான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். எனவே கண்டராதித்தர் தன் மனத்தின் ஆசையை மறந்து மரணத்தறுவாயிலிருந்து தாத்தாவின் மனத்தை மேலும் புண்பாடுத்த விரும்பாமல் நாடhள ஒப்புக் கொண்டார். சுந்தர சோழருக்கு இளவரசு பட்டம் கட்டிஇ அவர் சந்நதிதான் நாடாள வேண்டுமென்ற தன் தாத்தாவின் ஆசையை நிறைவேற்ற சபதம் கொண்டார்

**கண்டராதித்த சோழரும் செம்பியன் மாதேவியும்**

கண்டராதித்த சோழரின் மூத்த மனைவி வீரநாராயணி தேவி சிவபதம் அடைந்தபின்னர் நாற்பது வயது வரையில் மறுமணம் பற்றி எண்ணாமல் சிவபூஜையிலே தன் காலத்தைக் கழித்தார். தாத்தாவின் ஆசைக்கு இணங்கி சோழ இராஜ்யத்தை ஏற்று ஆட்சி செய்த வேளையில் சிவ பக்தியில் ஈடுபட்ட 'பிச்சி' யான செம்பியன் மாதேவியைக் கண்டார். தன்னைப் போலவே சிவபக்தையான செம்பியன் மாதேவியை மணந்து "கற்பென்பது கற்போல் உறுதியான இருபாலர் காதற்பண்பு"

(தமிழ்ப் பொழிப்புரை ப.70)

என்ற பாடல்வரிகளுக்கு ஏற்ப நெடுங்காலம் வாள்ந்தன

மற்ற பெண்கள் குழந்தையுடன் மகிழ்வதைக் கண்டுமாதேவியின் தாயமையுணர்வு விழித்துக் கொள்ள மதுராந்தகக் தேவன் பிறக்கிறார். தன்னைப் போலவே தன் மகனையும் சிவபக்தனாக வளர்க்கிறார் கண்டராதித்த தேவர்.

**மண்ணாசையும் மதுரந்தகனும்**

போர்களில் ஈடுபடும் ஆர்வம் கொண்ட அரிஞ்சய சோழரும் அவருடைய மகன்களும் சிம்மாசனத்திற்கு உரியவர்கள் என்று பராந்தகச் சக்கரவர்த்தி எண்ணியதை கண்டராதித்ததேவர் அதன்படியே நடப்பதாக வாக்குக் கொடுத்ததை கி.பி. 957ல் கண்டராதித்த சோழன் மறைவிற்கு பிறகு தன் மகன் மதுராந்தகனிடம் கூறுகின்றார் செம்பியன் மாதேவி. கணவரின் ஆசைபடி மதுரந்தகனையும் இறைவழிபாடு செய்ய தூண்டுகின்றார். ஆனால் அரிஞ்சய சோழருக்குப் பிறகு சுந்தர சோழர்

ஆட்சியில் இருக்கும் போது மதுராந்தகன் பெரியவனாகிறான். தன் மாமனார் சின்னப் பழுவேட்டரையரின் தூண்டுதலாலும் பழுவூர் இளையராணி நந்தினியின் சதியாலும் சிவபக்தனாக இருந்த மதுராந்தகசோழன் அரசாள ஆசை கொள்கிறார். தன் மாமன் முதற்கொண்டு பழுவூர் சிற்றரசர்கள் போள்ற சிற்றரசுகளை ஒருங்கிணைத்து சோழநாட்டினை ஆள முயல்கின்றார். ஆனால் செம்பியன் மாதேவியோ தனது கணவரின் விருப்பத்தை நிறைவேற்ற தன் மகன் மதுராந்தகனை அரசுரிமை ஆளும் ஆசையிலிருந்து சிவபூஜை செய்ய தூண்டுகின்றார். மதுராந்தகனின் நாடாளும் ஆசையை அறிந்த பின்னர் தன் மகனிடம் சிவபெருமான் ரிஷபாரூடராய் வந்து கண்டராதித்த சோழரை மண்ணுலகிலிருந்து அழைத்து போனதைக் கூறி அப்பாவின் விருப்பத்தை நிறைவேற்ற மகன் கடமைப்பட்டவன் என்கிறார். அதைக்கேட்ட மதுராந்தகன் ‘என்னிடம் தந்தை எதுவும் கூறவில்லை நான் என் கடமைப்பட்டிருக்கிறேன்?’ என்று கேட்டு கோபம் அடைகிறான. ; மகனே! உன்னை இந்த மண்ணுலக வாழ்க்கையில் பற்றுதல் கொள்ளாமல் சிவபக்த சிகாமணியாகும்படி வளர்ப்பேன் என்று உன் தந்தைக்கு வாக்கு கொடுத்தேன் என்றும் கூறுகின்றார். ஆனால் எதையும் கண்டு கொள்ளாமல் தன் அன்னையை கடுஞ்சொற்களால் திட்டுகின்றான். கழுத்தில் இருந்த ருத்திராட்ச மாலையை கழற்றி எறிய முயல மாலை கழுத்தை நெறித்ததே தவிர அறுக்க முடியவில்லை. மகனின் கோபம் கண்டு பொறுமையாக அவனிடம் மீண்டும் பேசுகின்றார். அரசினால் ஆபத்து வருமென்றும்இ போர் தந்திரம் எதுவும் தெரியாதென்றும் கூறுகின்றார்.

**<u>சோழ ஆட்சியின் நன்மையும் பெரிய பிராட்டியும்</u>:**

சுந்தர சோழர் மதுராந்தக சோழனின் அரசாளும் ஆசையை அறிந்து அவருக்கு பட்டம் சூட்ட நினைக்கின்றார். அநிருத்த பிரம்மராயரின் தூதினைக் கொண்டு சோழ நாட்டின் நன்மைக்காக மதுராந்தகனை அரசாள கூறுகின்றார். ஏனெனில் இளவரசர் அருள் மொழிவர்மன் புயலில் சிக்கி இறந்துவிட்டான் என்ற வாதந்தியால் மதுராந்தகன் நாடாளுவது தான் சிறந்தது என்று சுந்தரசோழர் கூறுகின்றார். மேலும் வடநாட்டில் இருந்து கோவில்களை தரைமட்டமாக்கும் கொள்கை கொண்டோர் படை எடுத்துஇ கோவில்களை அழிவுநிலைக்கு உள்ளாக்குகின்றனர் என்றும் கூறுகின்றார்.

**<u>முடிவுரை</u>**

பொன்னியின் செல்வனின் வரும் சேந்தன் அமுதனே தன்னுயை உண்மையான புதல்வன் என முதன் மந்திரி அநிருத்தர் மூலமாக அறிந்து கொள்கின்றார் செம்பியன் மாதேவி. தான் சோழ இளவரசன் என்று அறிந்ததும் தனக்கு நாடாள ஆசை இல்லை எள்றும் சிவபெருமனுக்கு தொண்டு செய்யவே விரும்புவதாக சேந்தன் அமுதன் கூறுகின்றார். கண்டராதித்தனாருக்கும் செம்பியன் மாதேவிக்கும் பிறந்த சேந்தன் அமுதன் சிவமைந்தன் என அனைவரும் முடிவு செய்து மகிழ்கின்றனர். அன்பு பெருக்குடன் மகனுடனுமஇ ; சிவ வழிபாடுஇ ஆலயத்திருப்பணிகள் என தன் வாழ்நாளை தொன்னூறு ஆண்டுகள் கழித்தார் செம்பியன் மாதேவி.

**<u>மேற்சோள்கள</u>**

1. பொன்னியன் செல்வன் - கல்கி பாகம் (1-5)

வானதி பதிப்பகம் சென்னை

2. பொன்னியன் செல்வன் ஒலி வடிவம்